(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 20.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 ஒக்டோபர் 05 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரேமலால் ஜயசேக்கர,** துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ லசஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ நாலக பண்டார கோட்டேகொட**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ உதய கம்மன்பில**

**கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி**

**கௌரவ உதயகாந்த குணதிலக்க**

**கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன**

**கௌரவ யதாமிணீ குணவர்தன**

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

“பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜீவன் தொண்டமான் அவர்கள் தேசிய பேரவையிலிருந்து இராஜினாமா செய்தமையின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்குப் பதிலாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். ராமேஷ்வரன் அவர்களும் அதற்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்களும் தேசிய பேரவையில் பணியாற்றுவதற்காக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் .”

**II**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்களால் 2022 ஒக்டோபர் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம் ".

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் 2021 யூன் 30 ஆம் திகதிய 2234/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2022 செப்டெம்பர் 08 ஆம் திகதிய 2296/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றி குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2022 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2300/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தினை சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன் அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட –

(i) தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட கட்டளை;

(ii) 2014 ஆம் ஆண்டுக்கான தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கை;

(iii) 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கை;

(iv) 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கை;

(v) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கை;

(vi) 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(vii) 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(viii) 2018 ஆம் ஆண்டுக்கான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆண்டறிக்கை;

(ix) 2019 ஆம் ஆண்டுக்கான ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்;

(x) 2020 ஆம் ஆண்டுக்கான ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்;

(xi) 2019 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் வருடாந்த அறிக்கை;

(xii) 2020 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியின் வருடாந்த அறிக்கை;

(xiii) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை;

(xiv) 2020 ஆம் ஆண்டுக்கான ரணவிரு சேவா அதிகாரசபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(xv) 2021 ஆம் ஆண்டுக்கான ரணவிரு சேவா அதிகாரசபையின் ஆண்டறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **அச்சிடப்பட** வேண்டுமெனவும் ச**பாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) நெலுன்தெனிய, கொண்டகல, அஸ்ஸெல்கந்த, இல. 206 இல் வதியும் திரு. ஜி.சி. சமன்திலகவினது 2022.08.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மல்மடுவ, பஹல மடுகஸ்தென்ன எனும் முகவரியில் வதியும் திரு. ஜி.எம். தேவப்பிரிய முஹந்திரமினது 2022.04.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) யட்டியன்தொட்ட, நவட, லெவன்ட் வீதி, ஊராகல குடியிருப்பு எனும் முகவரியில் வதியும் திரு. ஆர்.ஏ. பெஸில் அன்தனீ பெரேராவினது 2022.08.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்தார்.

(2) நிவிதிகல, ஹல்கந்தலிய எனும் முகவரியில் வதியும் திரு. கே.டப்ளியூ.சீ.என். தயாரத்னவினது 2022.08.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பிரேமலால் ஜயசேக்கர சமர்ப்பித்தார்.

(3) சியம்பலாபே, மீகஹவத்த, ரணசிங்க மாவத்தை, இல. 90/5 இல் வதியும் திரு. ஆர்.பி.கே.டப்ளியூ.கே. ரணசிங்கவினது 2022.08.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சிசிர ஜயகொடி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5.	*மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை:*** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2022 மே 31 ஆம் திகதிய 2282/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.08.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 11.47 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்குவாராக” என கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல முன்மொழிய கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.1.00 மணிக்கு கௌரவ சமன்பிரிய ஹேரத் தலைமை தாங்கினார்.)

**6. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்:** ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2022 செப்தெம்பர் 22 ),— “பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 8, 9, 19, 50, 52, 54, 55, 57, 58, 68, 70, 72, 111, 112, 119, 120, 121 மற்றும் 122 ஆகியவற்றை திருத்துதல் தொடர்பாக 2022 செப்தெம்பர் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பின்வரும் விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**1. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

8. (1) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் தொடங்குகின்ற வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக மாதந்தோறும் முதலாவதும் மூன்றாவதுமான வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் கூடுதல் வேண்டும்.

(2) பாராளுமன்ற அமர்வு மு.ப. 9.30 மணிக்கும் ஆரம்பமாகும்:

ஆயினும், சனாதிபதி அவர்களால் கூட்டப்படும் அமர்வொன்று அதற்காக சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பிடப்பட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(3) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, பாராளுமன்ற கூட்ட தினங்களில் பி.ப. 12.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் ஏதேனும் அலுவல் மீதான நடவடிக்கைகள் வினாவின்றி இடைநிறுத்தப்பட்டு, பி.ப. 1.00 மணிக்கு மீளத் தொடங்கப்படும்.

(4) சபாநாயகரால், பி.ப. 5.30 மணிக்கு வினாவின்றிப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படல் வேண்டும்.

(5) பி.ப. 4.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வேளையில் பாராளுமன்றம் குழுநிலையிலிருந்தால், தலைமைதாங்கும் உறுப்பினர் அக்கிராசனத்தை விட்டகன்று பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல் வேண்டுமென்பதுடன். பாராளுமன்றத்தையோ விவாதத்தையோ ஒத்திவைப்பதற்காக அல்லது குழுநிலையில் தலைமைதாங்கும் உறுப்பினர் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்பதற்காகவோ பிரேரணையொன்று பிரேரிக்கப்பட்டால், அத்தகைய தடங்கற் பிரேரணை ஒவ்வொன்றும் வினாவின்றியே வலுவற்றதாதலும் வேண்டும்:

ஆயினும், அலுவலை இடைநிறுத்தும்போது எப்பொழுதும் 46 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் விவாதம் முடிவுறுதல் பிரேரிக்கப்படலாம். அவ்வாறு பிரேரிக்கப்பட்டால் அல்லது அந்நிலையியற் கட்டளையின் கீழ் நடவடிக்கைகள் நிகழ்ந்துகொண்டிருந்தால், அந்நடவடிக்கைகளின் விளைவான விடயமும் அதே நிலையியற் கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறெந்தப் பிரேரணையினதும் விடயமும் தீர்வு காணப்படும்வரை சபாநாயகரோ தலைமைதாங்கும் உறுப்பினரோ அக்கிராசனத்தை விட்டகலலாகாது.

(6) பரிசீலனையிலிருக்கும் அலுவல் பி.ப. 4.30 மணிக்கு முடிவாக்கப்பட்ட பின்னர் உறுப்பினரொருவர் எதிர்ப்புத் தெரிவிக்கும் அலுவலெதுவும் பரிசீலனைக்குட்படுத்தப் படுதலாகாது.

(7) இந்நிலையியற் கட்டளையின் (4) மற்றும் (5) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் சபை அலுவலை முடிவுறுத்தும் நோக்கத்துக்காக அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்ட பிரேரணை சமுகமளித்திருக்கும் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படின், பாராளுமன்றத்தினால் அமர்வு நேரம் நீடிக்கப்படலாம்.

**2. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 9 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

9. பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் திருத்தம் அல்லது விவாதமின்றி குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அலுவல்கள் மீதான நடவடிக்கைகள் குறிப்பிட்ட தினமொன்றின் அமர்வில் 8 ஆம் நிலையியற் கட்டளை ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்ற பிரேரணையொன்றை மேற்கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படின், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அலுவலானது, அலுவலை இடைநிறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அது கலந்துரையாடலின்கீழ் இருப்பின் இடைநிறுத்தப்படுதலுமாகாது; அத்துடன் அது எதிர்க்கப்பட்டபோதிலும் எந்நேரத்திலும் அவ்வலுவல் எடுக்கப்படலாம்:

ஆயினும், 8 ஆம் நிலையியற் கட்டளையின் செயற்பாட்டிலிருந்து விலக்குப்பெற்ற அலுவல்கள் பி.ப. 4.30 மணிக்குப் பின்னர் முடிவுறும்போது, விலக்குப்பெற்ற அலுவல்கள் இறுதி விடயம் முடிவுற்றதும் சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை உடனடியாக ஒத்திவைத்தல் வேண்டும்.

**3. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 19 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

19. (1) கேள்விகளின் இறுதியில் உறுப்பினரொருவர் தமது இருக்கையிலிருந்து எழுந்து நின்று திட்டவட்டமான அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றை எடுத்துரைத்து, அவ்வலுவலை விவாதிப்பதற்காகப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் பிரேரணையைப் பிரேரிக்க அனுமதி கேட்கும் சந்தர்ப்பத்தில் தவிர, பொது அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும் வரை அமைச்சரவை அமைச்சரொருவராலன்றி, உறுப்பினர் ஒருவரினால் பாராளுமன்ற ஒத்திவைப்பிற்கான பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்க முடியாது.

(2) உறுப்பினரொருவரால் 1 ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் அத்தகைய பிரேரணையொன்றைப் பின்வரும் சந்தர்ப்பங்களிலன்றிப் பிரேரிக்க இயலாது:-

(அ) சம்பந்தப்பட்ட பிரேரணையைப் பிரேரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தினத்தன்று அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அப்பிரேரணை பற்றிச் சபாநாயகருக்கு எழுத்துமூலம் அறிவித்து அவரது இணக்கத்தைப் பெற்றிருத்தல்; அத்துடன்

(ஆ) உரிய உறுப்பினரால் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருத்தல்; அல்லது

(இ) பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதுக்குக் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால்;

தவிர (1) ஆவது பந்தியின் கீழ் அவ்வாறானதோர் பிரேரணை உறுப்பினர் ஒரவரினால் சமர்ப்பிக்கப்படலாகாது:

ஆயினும், சபாநாயகர் இணங்க மறுக்குமிடத்து அல்லது விவாதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரேரணை ஒழுங்கற்றதென அபிப்பிராயப்படுமிடத்து அவர் அப்பிரேரணை பற்றிய முன்னறிவித்தலை அல்லது சபாநாயகரால் அனுமதிக்கப்பட்டவாறு அதன் ஒரு பகுதியை வாசிப்பதற்கு அனுமதி வழங்கி அதன் பின்னர் சபாநாயகர் அதற்கு இணங்க மறுத்தமைக்கான அல்லது ஒழுங்கற்றதென அபிப்பிராயப்பட்டமைக்கான காரணத்தைக் கூறுதலும் வேண்டும்.

(3) பிரேரணை அவ்வாறு ஆதரிக்கப்பட்டால் அல்லது பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் அப்பிரேரணை தொடர்பாக பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்றத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) எந்தவொரு தினத்திலும் ஒன்றிற்கு மேற்பட்ட அத்தகைய பிரேரணைகளிற்கு அனுமதி கோரலாகாது.

(5) அரசாங்க அலுவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் தினங்களில், இந்நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின்கீழ் முன்வைக்கப்படும் பிரேரணையைத் தவிர பாராளுமன்றத்தினை ஒத்திவைப்பதற்கான அத்தகைய பிரேரணையெதுவும் அமைச்சரவையின் அமைச்சரொருவராலன்றி அத்தினத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுக்கிடையே பி.ப 4.30 மணிக்கு முன்னர் பிரேரிக்கப்பட இயலாது.

**4. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 50 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

50. (1) அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கமைய, எவரேனும் அமைச்சரவையின் அமைச்சர் முன்னறிவித்தலின் பின்னர், சட்டமூலமொன்றை அறிமுகப் படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் கட்டளையின்றி, அதனைச் சமர்ப்பிக்கலாம். பொது அலுவல்கள் ஆரம்பத்தில் சட்டமூலமொன்று அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும்போது, சட்டமூலத்தின் தலைப்பு செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சட்டமூலமானது அப்போது முதலாவது முறையாக மதிப்பிடப்பட்டுள்ளதென்றும் அச்சிடப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதென்றும் கருதப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முற்படாத ஒரு திகதியன்று இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்:

ஆயினும், அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அவசர சட்டமூலமொன்று அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரால் பணிக்கப்படும் திகதியொன்றில் இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(2) முதலாம் மதிப்பீட்டின் பின்னர் அத்தகைய சட்டமூலம் பிரேரணை எதுவுமின்றி உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். குழுவானது சட்டமூலத்திற்குத் திருத்தங்களைப் பரிந்துரைக்கலாம். குழுவானது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் வரை அல்லது பாராளுமன்றத்தினால் அறிக்கையிடுவதற்காக வழங்கப்பட்ட காலம் முடியும் வரை சட்டமூலம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(3) அமைச்சரவையின் கருத்துக்கு அமைய தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஏதேனும் விடயத்துக்கு உடனே தேவைப்படும், அது பற்றி அமைச்சரவை செயலாளரின் கையொப்பத்தையுடைய குறிப்பினைக் கொண்ட, ஒரு சட்டமூலத்துடன் தொடர்புடைய சனாதிபதியினால் பிரதமநீதியரசருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணத்தின் பிரதியொன்று அரசியலமைப்பின் 122(1) உறுப்புரைக்கு அமைய சபாநாயகருக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில், அரசியலமைப்பின் 122(1)(இ) சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சபாநாயகருக்கு உயர்நீதிமன்றத்தினால் அதன் தீர்ப்பு வழங்கப்படும்வரை அச் சட்டமூலம் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொள்ளப்படலாகாது.

**5. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

52. (1) ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்க விரும்பும் தனியார் உறுப்பினர் எவரும், சட்டமூலத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து அச்சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒரு பிரேரணை உருவில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் உறுப்பினர், அவரது உத்தேச சட்டமூலத்தின் பிரதிகளைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் அப்பிரேரணையின் பிரதியுடன் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) செயலாளர் நாயகம் அச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதா மற்றும் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாம் திருத்தத்தின் ஏற்பாடுகளிற்குட்படுகின்றதாவென்பது தொடர்பாகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தை அறிந்துகொள்வதற்காக அச்சட்டமூலத்தைச் சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும். சட்டத்துறைத் தலைமையதிபதி ஆறு வார காலத்தினுள் தனது கருத்தினைப் பாராளுமன்றத்திற்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தினைப் பெற்றதன் பின்னர் செயலாளர் நாயகம் அச்சட்டமூலத்தைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

(5) சட்டமூலமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள் கழிந்ததன் பின்னர் எந்நேரத்திலும் மேற்படி (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரேரணை பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(6) பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதும் அல்லது சபையால் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதிற்கும் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரின் பிரேரணையை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால், அச்சட்டமூலம் முதலாம் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அதன்மீது விவாதமெதுவும் மேற்கொள்ளப்படாது சட்டமூலத்தின் விடயங்களும் பணிகளும் தொடர்பாகக் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ அறிக்கையிடுவதற்காக ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய அமைச்சரோ அல்லது பிரதியமைச்சரோ இல்லாதவிடத்து சபாநாயகர் நியமிக்கும் வேறோரு அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ ஆற்றுப்படுத்துவதுடன், சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை அச்சட்டமூலம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(7) மேற்படி (6) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அல்லது அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்குச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறுமாதங்கள் முடிவடைந்த பின் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அல்லது பிரதி அமைச்சரினால் அறிக்கையெதுவும் சமர்ப்பிக்கப்படாவிடின், அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பான உறுப்பினர் விரும்பும் திகதிக்கு இரண்டாம் மதிப்பீட்டிற்காக அச்சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடப்படல் வேண்டும்.

**6. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 54 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

54. தனிப்பட்டவர்களின் உரிமைகளோ, நலன்களோ எந்தவொரு சட்டமூலத்தினாலும் தனித்தன்மையதாய் பாதிக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட எவரேனும் தரப்பினர் அத்தகைய சட்டமூலம் எந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றதோ அந்தக் குழுவிற்கு மனுவொன்றை சமர்ப்பித்து, பாதிக்கப்பட்டவர் நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ அக்குழுவினால் செவிமடுக்கப்படலாம்.

**7. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 55 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

55. (1) அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலமொன்று தவிர்ந்த, வேறு சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்கு முற்படாத ஒரு திகதியின் இரண்டாவது மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

(2) ஏதாவது சட்டமூலமோ அல்லது அதிலுள்ள ஏதாவது ஏற்பாடோ அரசியலமைப்புக்கு முரணானதாகவுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் கோரப்பட்டு அது ஆற்றுப்படுத்தலின் அல்லது மனுவின் பிரதியொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்:-

(அ) அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன்றத்தின் முதலாவது நாட் கூட்டத்தின்போது சபாநாயகரினால் அத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது மனு தாக்கல் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குத் தெரிவிக்கப்படும்வரை அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தலோ, மனுத்தாக்கலோ செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்கள் முடியும்வரை இவற்றுள் எது முதலில் நிகழுகின்றதோ அதுவரை, அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எந்நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது.

(இ) உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வறிவித்தலின்மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலுமாகாது.

**8. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 57 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

57. சட்டமூலமொன்று இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டதும் அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரினால் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மேல் அச்சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்:

ஆயினும், அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரினால் செய்யப்பட்ட பிரேரணையின்மேல் பாராளுமன்றம் அவ்வாறு முடிவுசெய்தால், வருடாந்த அல்லது குறைநிரப்பு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தவிர்ந்த பிறிதொரு சட்டமூலமொன்று சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய விசேட குழுவொன்றிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

**9. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 58 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

58. சட்டமூலமொன்று விசேட குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளபோது அக்குழுவானது அச் சட்டமூலம் பற்றி அறிக்கையிடும்வரை அச்சட்டமூலத்தின்மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது.

**10. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 68 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

68. சட்டமூலமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழு அதன் விதப்புரைகளைத் தருகின்ற அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் அறிக்கையின் பிரதியொன்று ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.

**11. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 70 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

70. ஒரு சட்டமூலத்தின் சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் அல்லது விசேட குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றம் பணிப்புரை விடுக்கும் தினத்தில் பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படல் வேண்டும். சட்டவாக்க நிலையியற் குழுவின் அல்லது விசேடகுழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டபின் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும்

திருத்தங்களை மட்டுமே பரிசீலிக்கும் எனினும் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம். அவ் அறிக்கையைப் பரிசீலித்த பின் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குழுநிலையின் திருத்தங்கள் தவிர்ந்த புதிய திருத்தங்கள் எதையும் பாராளுமனத்தினால் செய்ய முடியாது. ஆனால் குழுவால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பற்றிய சட்டமூலம் மீண்டும் அக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படலாம்.

**12. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 72 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

72. (1) சட்டவாக்க நிலையியற் குழுவினால் திருத்தங்களின்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட சட்டமூலமொன்று சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழுவினால் பரிசீலனைக்கென நியமிக்கப்பட்ட நாளன்று உடனடியாக மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

(2) சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேடகுழு சட்டமூலத்தைத் திருத்தியிருந்தால் குழுவினால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்து முடிந்தவுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாவது மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

**13. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

111. (1) தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விடயங்களையும் பணிகளையும் கொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேற்படலாகாது.

(2) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் ஒரு பாராளுமன்றம் தொடர்ந்திருக்கும் போது செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ அதன் விசாரணைகளைத் தொடர்ந்து நடாத்துதலும் வேண்டும்.

(3) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட சட்டமூலங்கள் தவிர குழுவிற்குப் பரிந்துரைக்கப்படும் ஏதேனும் சட்டமூலம், பொருத்தனை, குழுவின் விடயப்பரப்பெல்லையினுள் வரும் வருடாந்த அறிக்கை மற்றும் செயலாற்று அறிக்கை உட்பட மற்றும்/அல்லது ஏதேனும் குழு மற்றும்/ அல்லது அமைச்சரொருவர், எவ்விடயம் அல்லது தமது நியாயாதிக்கத்திற்குள்ளான விடயங்களும் பணிகளும் தொடர்பான வேறேதேனும் கருமம் தொடர்பாகப் பரிசோதனை செய்வதற்குத் தத்துவமுடையனவாதல் வேண்டும்.

(4) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அவற்றின் பொறுப்புக்களைப் பிரயோகிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவசியமானவை அல்லது பொருத்தமானவை என அவை கருதுகின்ற எவ்விடயம் தொடர்பாகவும் அத்தகைய புலனாய்வுகளையும் ஆய்வுகளையும் நடாத்தலாம்.

(5) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் ஒவ்வொரு மாதமும் இரண்டு நாட்களுக்கு குறையாமல் கூடுதல் வேண்டும்.

(6) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் பின்வரும் விடயங்களில் பாராளுமன்றத்திற்கு உதவுவதற்கென பொதுவான மேற்பார்வைப் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தற்போதுள்ள அரசாங்க கொள்கைகளின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை ஆகியவை பற்றிய அதன் பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

(ஆ) மாற்றுக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்கான எதிர்கால ஆராய்ச்சி மற்றும் எதிர்வுகூறலுக்கான அதன் செயற்பாடுகள்;

(இ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை தொடர்பாகவும் ஏதேனும் புதிய அல்லது மேலதிகச் சட்டங்களை இயற்றுவதற்கான அவசியத்தை அல்லது

விருப்பினைச் சுட்டிக் காட்டக்கூடிய நிலைமைகள், சூழ்நிலைகள் ஆகியவை பற்றிய பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

(ஈ) ஏதேனும் சட்டம் அத்துடன் அவசியமான அல்லது பொருத்தமான மேலதிகச் சட்டவாக்கங்களை வகுத்தமைத்தல் பரிசீலித்தல் மற்றும் சட்டமாக்குதல் அல்லது ஏதேனும் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.

(7) அந்தந்த துறைசார் மேற்பார்வைக் குழுவின் நியாயாதிக்கத்தினுள் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது ஏதேனும் பதவியினை வகிப்பதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரினதும் தகுதியினை பரிசோதனை செய்தலும் பொருத்தமான அமைச்சுக்கு அத்தகைய ஆட்கள் தொடர்பான விதப்புரைகளைச் செய்தலும்;

(8) பின்வருவோர் தவிர்ந்த எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களாகச் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதல் வேண்டும்:-

(அ) சபாநாயகர்;

(ஆ) பிரதிச் சபாநாயகர்;

(இ) குழுக்களின் பிரதித் தவிசாளர்;

(ஈ) பிரதம அமைச்சர்;

(உ) பாராளுமன்ற சபை முதல்வர்;

(ஊ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்; அத்துடன்

(எ) அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள்.

(9) அரசியலமைப்பின் 45(1) ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அத்தகைய அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் எந்த அமைச்சரவை அமைச்சரின் நோக்கெல்லையின்கீழ் பணியாற்றுகின்றாரோ அந்த அமைச்சரவையின் அமைச்சரின் ஏதேனும் விடயம், பணி, திணைக்களம் அல்லது நிறுவனம் என்பவற்றைப் போன்ற அதன் நியாயாதிக்கமும் தொடர்புபட்ட பணிகளும் உள்ளனவான ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவில் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதலாகாது:

ஆயினும், சட்டமூலம் ஒன்று துறைவார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தில் குழுவிற்கு உதவுவதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சரை அல்லது பிரதி அமைச்சரை குழுவானது அதன் கூட்டத்திற்கு அழைக்கலாம்.

(10) தெரிவுக் குழுவானது துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பெயர்குறிக்கும் போது, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு உரிய கவனம் செலுத்தி, அத்தகைய அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் தலைவர்களினால் செய்யப்பட்ட பெயர் நியமனத்திற்கு இணங்கச் செயற்படல் வேண்டும்.

(11) குறிப்பிட்ட துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினரல்லாத எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் அக்கூட்டத்தில் நடைமுறைகளை அவதானிப்பதற்கு அக்குழுவின் தவிசாளரால் அனுமதிக்கப்படலாம்.

(12) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அதன் முதலாவது கூட்டத்திலும் அதன் பின்னர் தவிசாளர் பதவி வறிதாகிய பின்னர் கூடும் முதலாவது கூட்டத்திலும், துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(13) ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் அனுமதியைப் பெறாமல் அத்தகைய குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வருகை தராதிருக்கும் குழுவின் உறுப்பினர் அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(14) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அது அவசியமெனக் கருதுமிடத்து, அவசியமானவையெனக் குழு கருதக்கூடியவாறான அத்தகைய கருமங்களைப் பரிசோதனை செய்து அத்தகைய குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அதன் சொந்த உறுப்பினர்களிலிருந்து உபகுழுக்களை நியமிக்கலாம்.

(15) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் ஆற்றுப்படுத்துகைத் திகதியிலிருந்து ஆறு வாரங்கள் கழியும்வரை, பாராளுமன்றம் வேறுவகையாகப் பணித்திருந்தாலொழிய, பாராளுமன்றத்தினால் கவனத்திற்கெடுக்கப்படுதலாகாது. பாராளுமன்றமானது தீர்மானமொன்றின் மூலம் அத்தகைய காலப்பகுதியை தீர்மானிக்கப்படலாம்.

(16) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஏதேனும் சட்டமூலம் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க முக்கியத்துவம் வாய்ந்த கருமம் தொடர்பாக எவரேனும் பாதிக்கப்பட்ட அல்லது அக்கறைகொண்ட எவரேனுமாளிடமிருந்து சான்று கோரலாம்.

(17) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஆட்களை அழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவமளிக்கப்படுவதுடன் அவர்களின் முன்னர் எடுக்கப்பட்ட சான்றின் நிகழ்ச்சிக் குறிப்புகளுடன் சேர்த்து அவர்களின் அபிப்பிராயங்களையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(18) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழு சட்டத்தை இயற்ற அல்லது சட்டவாக்கம் சாராத அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட விடயம் குறித்துரைக்கப்பட்ட மற்றும் அமைச்சுப் பொறுப்பைக் கொண்ட அமைச்சரவையின் அமைச்சர் மற்றும் அவ்வாறு ஒதுக்கப்படாவிட்டால், பிரதமர் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட பரிந்துரைகளை எட்டு வாரங்களுக்குள் நிறைவேற்றி, அந்த அவதானிப்புகள் தொடர்பாக அவர் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது குறிப்பிட்ட சிபாரிசு நிறைவேற்றப்படக்கூடாது என்று அமைச்சர் கருதினால், அதற்கான காரணங்களை அவர் எழுத்துமூலமாக விளக்கி அவர் முன்மொழிகின்ற மாற்று நடவடிக்கையை சுட்டிக்காட்டுதலும் வேண்டும். குழுவிற்குத் தேவைப்பட்டால் உரிய அமைச்சருக்கு விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன், அது தொடர்பில் எழும் கேள்விகளுக்கு, எட்டு வாரங்களுக்குள் பதிலளித்தலும் வேண்டும்.

(19) (அ) குழுவின் முன் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு விடயத்திலும் குழுவிற்கு உதவுவதற்கு 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஐந்திற்கு (5) மேற்படாத இளைஞர் பிரதிநிதிகளை தவிசாளர் அழைக்கலாம்.

(ஆ) தவிசாளரின் அனுமதியுடன், அவ்வாறு அழைக்கப்பட்ட இளைஞர் பிரதிநிதிகள், சாட்சிகளிடம் இருந்து கேள்விகளைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதோடு மற்றும் குழுவின் முன் ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்:

எவ்வாறாயினும், அந்த இளைஞர் பிரதிநிதிகள் குழுவில் வாக்களிக்க மாட்டார்கள்.

(இ) குழு தீர்மானிக்கின்றவாறான எந்தவொரு தீர்மானத்திற்கும் உட்பட்டு, அறிக்கைக்கான அநுபந்தம் ஒன்றாக குழுவின் அறிக்கையில் இளைஞர் பிரதிநிதிகளின் கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் அபிப்பிராயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு தவிசாளர் அனுமதியளிக்கலாம்.

(ஈ) இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் தெரிவுக் குழுவினால் செய்யப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**14. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

112. (1) ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்திலும் காலத்திற்கு காலம் தேவையானவாறு தெரிவுக்குழுவானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியவாறான அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கைக்கு சமமான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களை நியமிக்கலாம் :-

(அ) தவிசாளராக உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர்

(ஆ) இராஜாங்க அமைச்சர்,

(இ) பிரதி அமைச்சர், அத்துடன்

(ஈ) தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் வேறு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்.

(2) தனது கையொப்பத்தின் கீழான விண்ணப்பத்தின்மீது முன் அனுமதிபெறாமல் குழுவின் தொடரான மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருக்கும் எந்தவொரு உறுப்பினரும் அத்தகைய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீங்கியதாக கருதப்படுவதோடு தெரிவுக்குழுவினால் இணக்கம் காணப்பட்டாலன்றி அதே கூட்டத்தொடரில் அத்தகைய குழுவுக்கு மீளநியமிக்கப்படுதலுமாகாது:

ஆயின், முதலில் பாராளுமன்றத்தில் பெற்ற அனுமதியுடன் பாராளுமன்ற அமர்வுகளிலிருந்து சமுகமளிக்காதிருக்கும் அத்தகைய உறுப்பினர் அத்தகைய காலப்பிரிவில் வரும் ஒரு நாளில் இடம்பெறுகின்ற அத்தகைய குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் முன்னைய ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

(3) தான் உறுப்பினராகவில்லாத ஒரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டத்திற்கு எவரேனுமொரு பாராளுமன்ற உறுப்பினரும் தவிசாளரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம் என்பதோடு தவிசாளர் கோருகின்றபோது அதிலிருந்து நீங்கிக்கொள்ளுதலும் வேண்டும்.

(4) எவரேனும் பாராளுமன்ற உறுப்பினரால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்வதில் தவிசாளர் அல்லது பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் தீர்மானங்கள், கட்டளைகள் மற்றும் ஆவணங்கள் உள்ளிட்ட எந்தவொரு விடயங்கள் தொடர்பிலும் பரிசீலனைசெய்து அது தொடர்பில் அறிக்கையிடுவது அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கடமையாகும்.

(5) (அ) குழுவின் கூட்டமானது குறித்த அமைச்சின் செயலாளருடனான கலந்தாலோசனையுடன் கூட்டப்படலாம்.

(ஆ) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவானது தவிசாளர் ஊடாக எந்தவொரு சட்டமூலம் அல்லது பிரேரணையை முன்னெடுப்பதற்கும் தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் தவிசாளரினால் அழைக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும் கூடலாம். தவிசாளர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து தவிசாளரினால் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையேனும் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்வதோடு அர்த்தமுள்ள நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் வகைகூறுதல் அனைத்து அமைச்சு செயலாளர்களதும் கடமையாக இருப்பதோடு காலத்தற்கு காலம் அதன் சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களது எழுத்துமூல வேண்டுகோளின் பேரில் கூடிய விரைவில் ஒரு கூட்டம் கூட்டப்படலாம்.

(7) அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பெற்று பரிசீலனை செய்வதற்கும் இடத்திற்கு இடம்செல்வதற்கும் தமக்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்களை பூரணமாக பரிசீலனை செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் கூடுவதற்கும் ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களை கொண்டதாக இருக்கவேண்டுமென்பதோடு உரிய கூட்டநடப்பெண் இல்லாதபோது அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவினை தொழிற்படுத்தாமலிருப்பது அதன் தவிசாளரது கடமையாதல் வேண்டும்.

(9) குழுக்களிற்கான பொது விதிகள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களிற்கும் ஏற்புடையதாகும்.

**15. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

119. (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதித்தல் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, ஏதேனும் திணைக்களத்தின் அல்லது உள்ளூரதிகாரசபையின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் பற்றியும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயங்கள் தொடர்பான அவதானங்கள் பொதுநிதியின் முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(4) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவையின் அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களிற்குப் பொறுப்பான அமைச்சரவையின் அமைச்சர் களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புக்களையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வார காலப்பகுதியினுள் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அந்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவோ அல்லது அந்த சிபாரிசுகளை பூரணப்படுத்தமுடியாது என்பது அமைச்சர் கருதினால் அதற்கான காரணங்களை அவர் எழுத்துமூலமாக விளக்கி அவர் முன்மொழிகின்ற மாற்று நடவடிக்கைமுறைகளை சுட்டிக்காட்டுதலும் வேண்டும். குழு தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு நேரடியாக விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதோடு அது தொடர்பில் எழும் கேள்விகளுக்கு, எட்டு வாரங்களுக்குள் பதிலளித்தலும் வேண்டும்.

(5) (அ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவானது, திணைக்களங்களினதும் உள்ளூரதிகாரசபைகளினதும் எல்லாக் கணக்குகளினதும் நிதிகளினதும் முகாமையினதும் மீது பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட ஏதாவது உபகுழுக்கள் தேவையானவாறு பாராளுமன்றத்திலோ அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதாவது தொடர்புடைய நிறுவனங்களிலோ அமர்வுகளை நடத்தலாம்.

(இ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும்,

பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(7) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழு ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி குழுவின் தொடரான மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருக்கும் எந்தவொரு உறுப்பினறும் அவர் குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீங்கியவராக கருதப்படுவார்.

**16. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

120. (1) தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் அல்லது வேறு பொறுப்புமுயற்சியின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடைமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அறிக்கையிடுதல் வேண்டும். அவ் அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயம் தொடர்பான அவதானங்கள் பொது நிதியின் முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படலாம். எனினும், குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அரசாங்க நிதியை முறையாக கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய காரணங்கள் எழுத்துமூலம் விளக்கமளிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ் அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டுமென சிபாரிசுசெய்யடும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றும் முன்வைக்கப்படலாம். அவதானிப்புகள் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிறைவேற்றப்படமுடியாதுள்ள அவசியமெழாதென்பது அமைச்சரின் கருத்தாயின் அவரால் அதற்கான காரணங்கள் எழுத்துமூலம் முன்வைக்கப்பட வேண்டுமென்பதுடன் அவரால் பிரேரிக்கப்படும் நடவடிக்கைமுறைகள் குறிப்பிடப்பட வேண்டும். குழுவிற்கு தேவையாயின் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

(5) (அ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடைமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் எல்லாக் கணக்குகள்,

வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், முகாமை என்பவை தொடர்பாகப் பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய எவையேனும் உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு உப குழுவிற்கும் தேவையானபோது பாராளுமன்றத்தில் அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் கூட்டத்தை நடாத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க முடியும்.

(இ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு எவரேனும் உறுப்பினர்கள் குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எவையும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் பரிசீலனை செய்வதற்காக ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பவற்றைப் பார்வையிடவும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(7) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர் அவரின் உறுப்புரிமையை விட்டுச் சென்றவராக கருதப்படுவார்.

**17. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

121. (1) தவிசாளர் எதிர்க்கட்சி உறுப்பினராகவிருத்தல் வேண்டுமென்ற வரையறைக்கு உட்பட்டு, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத தவிசாளரொருவரையும் பதினொரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளதுமான அரசாங்க நிதி பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றைப் பரிசீலனை செய்வது அரசாங்க நிதி பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின்கீழ் வருமானங்ளைச் சேகரித்தல்;

(ஆ) திரட்டுநிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்காக அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(ஈ) அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(உ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பொருளாதார மந்தநிலைகள், ஒதுக்கீட்டைக் கைமாற்றுதல் மற்றும் எதிர்பார்க்கப்படாத மீதி;

(ஊ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்;

(எ) பொதுக் கடனும் கடன் சேவையும்; மற்றும்:

(ஏ) 2003 ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின்கீழான அறிக்கைகளும் கூற்றுக்களும்;

(ஐ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலங்கள், பிரேரணைகள், பிரேரணைகளுக்கான அங்கீகாரம் மற்றும் கட்டளைகள்

(3) பாராளுமன்றம் அல்லது ஏதேனும் குழு அல்லது அமைச்சரால் எந்தவொரு விடயத்தையும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு முன்வைக்கப்படலாம்.

(4) குழுவானது, மேற்குறித்த (2) மற்றும் (3) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களில் இருந்து எழுகின்ற பிரச்சினைகளை காலத்துக்காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை ஆரம்பிப்பதற்குமுன் குழுவினால்-

(i) மொத்த மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் அரசிறையையும் கணக்கிடுவதற்கான அடிப்படையாக பயன்படுத்தப்பட்ட அரசிறை நிதிசார் மற்றும் பொருளாதார ஊகங்களின் மீதான; மற்றும்

(ii) நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இசைவாதல் பற்றிய;

அறிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

(6) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் அறிக்கையொன்று பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படும்போது, அது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் அதன் பின் அவ்வறிக்கை தொடர்பில் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் எட்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(7) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் ஆட்களை அழைப்பதற்கும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் பிரேரணைகள் மற்றும் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை சாட்சிக் குறிப்புகளுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(8) கூட்ட நடப்பெண் நான்கு அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**18. தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 122 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய நிலையியற் கட்டளை பதிலீடு செய்யப்படுமாக:-**

122. (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பொது மனுக்கள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) முப்பதாம் நிலையியற் கட்டளையின் (10) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களைக் கவனத்திற்கொள்ளுதல் அதன் கடமையாதல் வேண்டும்.

(3) பகிரங்க அலுவரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதென பொது மனுக்கள் பற்றிய குழு கருதுமிடத்து, பொது மனுக்கள் பற்றிய குழு அத்தகைய மனுபற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தலாம்.

(4) பொது மனுக்கள் பற்றிய குழு, மனு ஒன்றை விசாரணை செய்த பின்னர் அல்லது பொது மனுக்கள் பற்றிய குழுவினால் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரிற்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தப்பட்ட மனுவொன்று தொடர்பில் அவரது நுண்ணாய்வு முடிவுற்றதன்மேல் அவரால் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைக் கவனத்திற் கொண்டதன்பின்னர், அத்தகைய மனு அல்லது அறிக்கைமீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைபற்றி அதன் அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம்.

(5) பொது மனுக்கள் பற்றிய குழு, அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றிய அதன் அபிப்பிராயத்தை, காலத்துக்குக்காலம் தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய மனுக்கள் மீதான அத்தகைய வேறு அவதானிப்புக்களுடன் சேர்த்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(6) அறிக்கையானது சபாபீடத்தில் இடப்படும்போது, சபாநாயகர் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கத்தினை எவரேனும் உரிய அமைச்சருக்கு அவரது அவதானிப்பு களுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வவதானிப்புகள் எட்டு வாரக் காலப்பகுதியினுள் அமைச்சரினால் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்.

(7) எவரேனும் உரிய அமைச்சரின் அவதானிப்புகளைப் பெற்றபின்னர் சபாநாயகர் அத்தகைய அவதானிப்புகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கும் மனுவைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாதவிடத்து தகுந்த தீர்வுகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட வேண்டும். அமைச்சரினால் ஒரு மாதகாலத்திற்குள் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அதனை நிறைவேற்றாமைக்கான காரணங்களை எழுத்துமூலம் முன்வைப்பதுடன் கருத்திற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.

(8) பொது மனுக்கள் பற்றிய குழு, அவசியமென அது கருதும்போது அக்குழுவின் உறுப்பினர்களிலிருந்து பொது மனுக்கள் பற்றிய குழுவினால் பணிக்கக்கூடியவாறான அத்தகைய மனுக்களை அல்லது அறிக்கைகளைப் பரிசோதனை செய்து அறிக்கையிடுவதற்காக பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களைக் கொண்ட உபகுழுக்களை நியமிக்கலாம்.

(9) பொது மனுக்கள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்கள் எவையேனும் அவற்றின் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும், களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடுவதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(10) பொது மனுக்கள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். பொது மனுக்குழுவின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர் அவரின் உறுப்புரிமையை விட்டுச் சென்றவராக கருதப்படுவார்" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக" என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.21 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

"கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமை தாங்குவாராக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.00 மணிக்கு கௌரவ இம்ரான் மஹ்ரூப் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.30 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துவதற்கான வரைவு இரண்டாம் முறையாக மதிப்பிடப்பட்டது.

"வரைவு நிலையியற் கட்டளைகள் முழுப்பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

நிலையியற் கட்டளை 8

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் இன்றைய தின ஒழுங்குப்பதிரத்திலுள்ள புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"8. (1) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் தொடங்குகின்ற வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக மாதந்தோறும் முதலாவதும் மூன்றாவதுமான வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் கூடுதல் வேண்டும்.

(2) பாராளுமன்ற அமர்வு மு.ப. 9.30 மணிக்கும் ஆரம்பமாகும்:

ஆயினும், சனாதிபதி அவர்களால் கூட்டப்படும் அமர்வொன்று அதற்காக சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பிடப்பட்ட நேரத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(3) பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, பாராளுமன்ற கூட்ட தினங்களில் பி.ப. 12.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் ஏதேனும் அலுவல் மீதான நடவடிக்கைகள் வினாவின்றி இடைநிறுத்தப்பட்டு, பி.ப. 1.00 மணிக்கு மீளத் தொடங்கப்படும்.

(4) சபாநாயகரால், பி.ப. 5.30 மணிக்கு வினாவின்றிப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படல் வேண்டும்.

(5) பி.ப. 4.30 மணிக்கு பரிசீலனையிலிருக்கும் எவ்வலுவலின் மீதிலுமான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வேளையில் பாராளுமன்றம் குழுநிலையிலிருந்தால், தலைமைதாங்கும் உறுப்பினர் அக்கிராசனத்தை விட்டகன்று பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல் வேண்டுமென்பதுடன். பாராளுமன்றத்தையோ விவாதத்தையோ ஒத்திவைப்பதற்காக அல்லது குழுநிலையில் தலைமைதாங்கும் உறுப்பினர் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்பதற்காகவோ பிரேரணையொன்று பிரேரிக்கப்பட்டால், அத்தகைய தடங்கற் பிரேரணை ஒவ்வொன்றும் வினாவின்றியே வலுவற்றதாதலும் வேண்டும்:

ஆயினும், அலுவலை இடைநிறுத்தும்போது எப்பொழுதும் 46 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் விவாதம் முடிவுறுதல் பிரேரிக்கப்படலாம். அவ்வாறு பிரேரிக்கப்பட்டால் அல்லது அந்நிலையியற் கட்டளையின் கீழ் நடவடிக்கைகள் நிகழ்ந்துகொண்டிருந்தால், அந்நடவடிக்கைகளின் விளைவான விடயமும் அதே நிலையியற் கட்டளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறெந்தப் பிரேரணையினதும் விடயமும் தீர்வு காணப்படும்வரை சபாநாயகரோ தலைமைதாங்கும் உறுப்பினரோ அக்கிராசனத்தை விட்டகலலாகாது.

(6) பரிசீலனையிலிருக்கும் அலுவல் பி.ப. 4.30 மணிக்கு முடிவாக்கப்பட்ட பின்னர் உறுப்பினரொருவர் எதிர்ப்புத் தெரிவிக்கும் அலுவலெதுவும் பரிசீலனைக்குட்படுத்தப் படுதலாகாது.

(7) இந்நிலையியற் கட்டளையின் (4) மற்றும் (5) ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் சபை அலுவலை முடிவுறுத்தும் நோக்கத்துக்காக அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்பட்ட பிரேரணை சமுகமளித்திருக்கும் பெரும்பாலான உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படின், பாராளுமன்றத்தினால் அமர்வு நேரம் நீடிக்கப்படலாம்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) மற்றும் 8(6) இல் காணப்படும் ''பி.ப. 4.30 மணிக்கு'' என்பது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக ''பி.ப. 5.00 மணிக்கு'' என்பது பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“நிலையியற் கட்டளை 8 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 9

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 9 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் இன்றைய தின ஒழுங்குப்பதிரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

“9. பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் திருத்தம் அல்லது விவாதமின்றி குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அலுவல்கள் மீதான நடவடிக்கைகள் குறிப்பிட்ட தினமொன்றின் அமர்வில் 8 ஆம் நிலையியற் கட்டளை ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்ற பிரேரணையொன்றை மேற்கொள்ளலாம் என்பதுடன் அத்தகைய பிரேரணை ஏற்றுக்கொள்ளப்படின், அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அலுவலானது, அலுவலை இடைநிறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அது கலந்துரையாடலின்கீழ் இருப்பின் இடைநிறுத்தப்படுதலுமாகாது; அத்துடன் அது எதிர்க்கப்பட்டபோதிலும் எந்நேரத்திலும் அவ்வலுவல் எடுக்கப்படலாம்:

ஆயினும், 8 ஆம் நிலையியற் கட்டளையின் செயற்பாட்டிலிருந்து விலக்குப்பெற்ற அலுவல்கள் பி.ப. 4.30 மணிக்குப் பின்னர் முடிவுறும்போது, விலக்குப்பெற்ற அலுவல்கள் இறுதி விடயம் முடிவுற்றதும் சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை உடனடியாக ஒத்திவைத்தல் வேண்டும்.”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 9 இன் காப்புவாசகத்தில் காணப்படும் “பி.ப. 4.30 மணிக்கு” என்பது நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக “பி.ப. 5.00 மணிக்கு” என்பதைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“நிலையியற் கட்டளை 9 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 19

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 19 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பதிரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

“19. (1) கேள்விகளின் இறுதியில் உறுப்பினரொருவர் தமது இருக்கையிலிருந்து எழுந்து நின்று திட்டவட்டமான அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றை எடுத்துரைத்து, அவ்வலுவலை விவாதிப்பதற்காகப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் பிரேரணையைப் பிரேரிக்க அனுமதி கேட்கும் சந்தர்ப்பத்தில் தவிர, பொது அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும் வரை அமைச்சரவை அமைச்சரொருவராலன்றி,

உறுப்பினர் ஒருவரினால் பாராளுமன்ற ஒத்திவைப்பிற்கான பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்க முடியாது.

(2) உறுப்பினரொருவரால் 1 ஆம் பந்தியின் கீழ் ஏதேனும் அத்தகைய பிரேரணையொன்றைப் பின்வரும் சந்தர்ப்பங்களிலன்றிப் பிரேரிக்க இயலாது:-

(அ) சம்பந்தப்பட்ட பிரேரணையைப் பிரேரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தினத்தன்று அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் அப்பிரேரணை பற்றிச் சபாநாயகருக்கு எழுத்துமூலம் அறிவித்து அவரது இணக்கத்தைப் பெற்றிருத்தல்; அத்துடன்

(ஆ) உரிய உறுப்பினரால் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருத்தல்; அல்லது

(இ) பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதுக்குக் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால்;

தவிர (1) ஆவது பந்தியின் கீழ் அவ்வாறானதோர் பிரேரணை உறுப்பினர் ஒரவரினால் சமர்ப்பிக்கப்படலாகாது:

ஆயினும், சபாநாயகர் இணங்க மறுக்குமிடத்து அல்லது விவாதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரேரணை ஒழுங்கற்றதென அபிப்பிராயப்படுமிடத்து அவர் அப்பிரேரணை பற்றிய முன்னறிவித்தலை அல்லது சபாநாயகரால் அனுமதிக்கப்பட்டவாறு அதன் ஒரு பகுதியை வாசிப்பதற்கு அனுமதி வழங்கி அதன் பின்னர் சபாநாயகர் அதற்கு இணங்க மறுத்தமைக்கான அல்லது ஒழுங்கற்றதென அபிப்பிராயப்பட்டமைக்கான காரணத்தைக் கூறுதலும் வேண்டும்.

(3) பிரேரணை அவ்வாறு ஆதரிக்கப்பட்டால் அல்லது பாராளுமன்றம் அனுமதி வழங்கினால் அப்பிரேரணை தொடர்பாக பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்றத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) எந்தவொரு தினத்திலும் ஒன்றிற்கு மேற்பட்ட அத்தகைய பிரேரணைகளிற்கு அனுமதி கோரலாகாது.

(5) அரசாங்க அலுவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் தினங்களில், இந்நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின்கீழ் முன்வைக்கப்படும் பிரேரணையைத் தவிர பாராளுமன்றத்தினை ஒத்திவைப்பதற்கான அத்தகைய பிரேரணையெதுவும் அமைச்சரவையின் அமைச்சரொருவராலன்றி அத்தினத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுக்கிடையே பி.ப 4.30 மணிக்கு முன்னர் பிரேரிக்கப்பட இயலாது. "திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 19(5) இலுள்ள " பி.ப. 4.30 மணிக்கு" என்பதை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக " பி.ப. 5.00 மணிக்கு" என்பதைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 19 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 50

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 50 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"50. (1) அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கமைய, எவரேனும் அமைச்சரவையின் அமைச்சர் முன்னறிவித்தலின் பின்னர், சட்டமூலமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் கட்டளையின்றி, அதனைச் சமர்ப்பிக்கலாம். பொது அலுவல்கள் ஆரம்பத்தில் சட்டமூலமொன்று அவ்வாறு அறிமுகப்படுத்தப்படும்போது, சட்டமூலத்தின் தலைப்பு செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சட்டமூலமானது அப்போது முதலாவது முறையாக மதிப்பிடப்பட்டுள்ள தென்றும் அச்சிடப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ள தென்றும் கருதப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முற்படாத ஒரு திகதியன்று இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்:

ஆயினும், அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அவசர சட்டமூலமொன்று அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரால் பணிக்கப்படும் திகதியொன்றில் இரண்டாம் மதிப்பீட்டிற்காக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(2) முதலாம் மதிப்பீட்டின் பின்னர் அத்தகைய சட்டமூலம் பிரேரணை எதுவுமின்றி உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். குழுவானது சட்டமூலத்திற்குத் திருத்தங்களைப் பரிந்துரைக்கலாம். குழுவானது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் வரை அல்லது பாராளுமன்றத்தினால் அறிக்கையிடுவதற்காக வழங்கப்பட்ட காலம் முடியும் வரை சட்டமூலம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(3) அமைச்சரவையின் கருத்துக்கு அமைய தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு அல்லது அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஏதேனும் விடயத்துக்கு உடனே தேவைப்படும், அது பற்றி அமைச்சரவை செயலாளரின் கையொப்பத்தையுடைய குறிப்பினைக் கொண்ட, ஒரு சட்டமூலத்துடன் தொடர்புடைய சனாதிபதியினால் பிரதமநீதியரசருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஆவணத்தின் பிரதியொன்று அரசியலமைப்பின் 122(1) உறுப்புரைக்கு அமைய சபாநாயகருக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில், அரசியலமைப்பின் 122(1)(இ) சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சபாநாயகருக்கு உயர்நீதிமன்றத்தினால் அதன் தீர்ப்பு வழங்கப்படும்வரை அச் சட்டமூலம் நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக்கொள்ளப்படலாகாது."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 50 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 52

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 52 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"52. (1) ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்க விரும்பும் தனியார் உறுப்பினர் எவரும், சட்டமூலத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து அச்சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒரு பிரேரணை உருவில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் உறுப்பினர், அவரது உத்தேச சட்டமூலத்தின் பிரதிகளைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் அப்பிரேரணையின் பிரதியுடன் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) செயலாளர் நாயகம் அச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதா மற்றும் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாம் திருத்தத்தின் ஏற்பாடுகளிற்குட்படுகின்றதாவென்பது தொடர்பாகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தை அறிந்துகொள்வதற்காக அச்சட்டமூலத்தைச் சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும். சட்டத்துறைத் தலைமையதிபதி ஆறு வார காலத்தினுள் தனது கருத்தினைப் பாராளுமன்றத்திற்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

(4) சட்டத்துறைத் தலைமையதிபதியின் கருத்தினைப் பெற்றதன் பின்னர் செயலாளர் நாயகம் அச்சட்டமூலத்தைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

(5) சட்டமூலமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள் கழிந்ததன் பின்னர் எந்நேரத்திலும் மேற்படி (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரேரணை பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(6) பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதும் அல்லது சபையால் அனுமதி வழங்கப்படாதவிடத்து இருபதிற்கும் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரின் பிரேரணையை ஆதரித்துத் தத்தம் இடங்களில் எழுந்து நின்றால், அச்சட்டமூலம் முதலாம் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அதன்மீது விவாதமெதுவும் மேற்கொள்ளப்படாது சட்டமூலத்தின் விடயங்களும் பணிகளும் தொடர்பாகக் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ அறிக்கையிடுவதற்காக ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய அமைச்சரோ அல்லது பிரதியமைச்சரோ இல்லாதவிடத்து சபாநாயகர் நியமிக்கும் வேறோரு அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ ஆற்றுப்படுத்துவதுடன், சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை அச்சட்டமூலம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(7) மேற்படி (6) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அல்லது அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்குச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறுமாதங்கள் முடிவடைந்த பின் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அல்லது பிரதி அமைச்சரினால் அறிக்கையெதுவும் சமர்ப்பிக்கப்படாவிடின், அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பான உறுப்பினர் விரும்பும் திகதிக்கு இரண்டாம் மதிப்பீட்டிற்காக அச்சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடப்படல் வேண்டும்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 52 திருத்தப்பட்டவாறு பாராளுன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 54

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 54 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப்

பிரேரித்தார்,—

"54. தனிப்பட்டவர்களின் உரிமைகளோ, நலன்களோ எந்தவொரு சட்டமூலத்தினாலும் தனித்தன்மையதாய் பாதிக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட எவரேனும் தரப்பினர் அத்தகைய சட்டமூலம் எந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றதோ அந்தக் குழுவிற்கு மனுவொன்றை சமர்ப்பித்து, பாதிக்கப்பட்டவர் நேரடியாகவோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ அக்குழுவினால் செவிமடுக்கப்படலாம். "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 54 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 55

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 55 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"55. (1) அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலமொன்று தவிர்ந்த, வேறு சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்கு முற்படாத ஒரு திகதியின் இரண்டாவது மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

(2) ஏதாவது சட்டமூலமோ அல்லது அதிலுள்ள ஏதாவது ஏற்பாடோ அரசியலமைப்புக்கு முரணானதாகவுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அரசியலமைப்பின் 121 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் கோரப்பட்டு அது ஆற்றுப்படுத்தலின் அல்லது மனுவின் பிரதியொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்:-

(அ) அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன்றத்தின் முதலாவது நாட் கூட்டத்தின்போது சபாநாயகரினால் அத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது மனு தாக்கல் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குத் தெரிவிக்கப்படும்வரை அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தலோ, மனுத்தாக்கலோ செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்கள் முடியும்வரை இவற்றுள் எது முதலில் நிகழுகின்றதோ அதுவரை, அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எந்நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது.

(இ) உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வறிவித்தலின்மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலுமாகாது."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 55 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 57

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 57 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"57. சட்டமூலமொன்று இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டதும் அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் ஒருவரினால் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மேல் அச்சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்:

ஆயினும், அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரினால் செய்யப்பட்ட பிரேரணையின்மேல் பாராளுமன்றம் அவ்வாறு முடிவுசெய்தால், வருடாந்த அல்லது குறைநிரப்பு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தவிர்ந்த பிறிதொரு சட்டமூலமொன்று சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய விசேட குழுவொன்றிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 57 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 58

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 58 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"58. சட்டமூலமொன்று விசேட குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளபோது அக்குழுவானது அச் சட்டமூலம் பற்றி அறிக்கையிடும்வரை அச்சட்டமூலத்தின்மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 58 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 68

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 68 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"68. சட்டமூலமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழு அதன் விதப்புரைகளைத் தருகின்ற அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன்

அறிக்கையின் பிரதியொன்று ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 68 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 70

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 70 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"70. ஒரு சட்டமூலத்தின் சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் அல்லது விசேட குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் பாராளுமன்றம் பணிப்புரை விடுக்கும் தினத்தில் பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படல் வேண்டும். சட்டவாக்க நிலையியற் குழுவின் அல்லது விசேடகுழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டபின் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும் திருத்தங்களை மட்டுமே பரிசீலிக்கும் எனினும் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம். அவ் அறிக்கையைப் பரிசீலித்த பின் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குழுநிலையின் திருத்தங்கள் தவிர்ந்த புதிய திருத்தங்கள் எதையும் பாராளுமனத்தினால் செய்ய முடியாது. ஆனால் குழுவால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பற்றிய சட்டமூலம் மீண்டும் அக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படலாம்.''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 70 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 72

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 72 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

''72. (1) சட்டவாக்க நிலையியற் குழுவினால் திருத்தங்களின்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட சட்டமூலமொன்று சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழுவினால் பரிசீலனைக்கென நியமிக்கப்பட்ட நாளன்று உடனடியாக மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

(2) சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேடகுழு சட்டமூலத்தைத் திருத்தியிருந்தால் குழுவினால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்து முடிந்தவுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம்; அல்லது மூன்றாவது மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.''

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“நிலையியற் கட்டளை 72 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 111

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

“111. (1) தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான விடயங்களையும் பணிகளையும் கொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேற்படலாகாது.

(2) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் ஒரு பாராளுமன்றம் தொடர்ந்திருக்கும் போது செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலோ அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலோ அதன் விசாரணைகளைத் தொடர்ந்து நடாத்துதலும் வேண்டும்.

(3) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட சட்டமூலங்கள் தவிர குழுவிற்குப் பரிந்துரைக்கப்படும் ஏதேனும் சட்டமூலம், பொருத்தனை, குழுவின் விடயப்பரப்பெல்லையினுள் வரும் வருடாந்த அறிக்கை மற்றும் செயலாற்று அறிக்கை உட்பட மற்றும்/அல்லது ஏதேனும் குழு மற்றும்/ அல்லது அமைச்சரொருவர், எவ்விடயம் அல்லது தமது நியாயாதிக்கத்திற்குள்ளான விடயங்களும் பணிகளும் தொடர்பான வேறேதேனும் கருமம் தொடர்பாகப் பரிசோதனை செய்வதற்குத் தத்துவமுடையனவாதல் வேண்டும்.

(4) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அவற்றின் பொறுப்புக்களைப் பிரயோகிக்கின்ற சந்தர்ப்பங்களில் அவசியமானவை அல்லது பொருத்தமானவை என அவை கருதுகின்ற எவ்விடயம் தொடர்பாகவும் அத்தகைய புலனாய்வுகளையும் ஆய்வுகளையும் நடாத்தலாம்.

(5) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் ஒவ்வொரு மாதமும் இரண்டு நாட்களுக்கு குறையாமல் கூடுதல் வேண்டும்.

(6) துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் பின்வரும் விடயங்களில் பாராளுமன்றத்திற்கு உதவுவதற்கென பொதுவான மேற்பார்வைப் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தற்போதுள்ள அரசாங்க கொள்கைகளின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை ஆகியவை பற்றிய அதன் பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

(ஆ) மாற்றுக் கொள்கைகளை வகுத்தமைப்பதற்கான எதிர்கால ஆராய்ச்சி மற்றும் எதிர்வுகூறலுக்கான அதன் செயற்பாடுகள்;

(இ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் பிரயோகம், நிருவாகம், நிறைவேற்றுகை, மற்றும் பயனுடைமை தொடர்பாகவும் ஏதேனும் புதிய அல்லது மேலதிகச் சட்டங்களை இயற்றுவதற்கான அவசியத்தை அல்லது விருப்பினைச் சுட்டிக் காட்டக்கூடிய நிலைமைகள், சூழ்நிலைகள் ஆகியவை பற்றிய பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்;

(ஈ) ஏதேனும் சட்டம் அத்துடன் அவசியமான அல்லது பொருத்தமான மேலதிகச் சட்டவாக்கங்களை வகுத்தமைத்தல் பரிசீலித்தல் மற்றும் சட்டமாக்குதல் அல்லது ஏதேனும் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.

(7) அந்தந்த துறைசார் மேற்பார்வைக் குழுவின் நியாயாதிக்கத்தினுள் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது ஏதேனும் பதவியினை வகிப்பதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரினதும் தகுதியினை பரிசோதனை செய்தலும் பொருத்தமான அமைச்சுக்கு அத்தகைய ஆட்கள் தொடர்பான விதப்புரைகளைச் செய்தலும்;

(8) பின்வருவோர் தவிர்ந்த எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களாகச் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதல் வேண்டும்:-

(அ) சபாநாயகர்;

(ஆ) பிரதிச் சபாநாயகர்;

(இ) குழுக்களின் பிரதித் தவிசாளர்;

(ஈ) பிரதம அமைச்சர்;

(உ) பாராளுமன்ற சபை முதல்வர்;

(ஊ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்; அத்துடன்

(எ) அரசியலமைப்பின் 43(1) ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள்.

(9) அரசியலமைப்பின் 45(1) ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அத்தகைய அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் எந்த அமைச்சரவை அமைச்சரின் நோக்கெல்லையின்கீழ் பணியாற்றுகின்றாரோ அந்த அமைச்சரவையின் அமைச்சரின் ஏதேனும் விடயம், பணி, திணைக்களம் அல்லது நிறுவனம் என்பவற்றைப் போன்ற அதன் நியாயாதிக்கமும் தொடர்புபட்ட பணிகளும் உள்ளனவான ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவில் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதலாகாது:

ஆயினும், சட்டமூலம் ஒன்று துறைவார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பத்தில் குழுவிற்கு உதவுவதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சரை அல்லது பிரதி அமைச்சரை குழுவானது அதன் கூட்டத்திற்கு அழைக்கலாம்.

(10) தெரிவுக் குழுவானது துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பெயர்குறிக்கும் போது, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு உரிய கவனம் செலுத்தி, அத்தகைய அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் தலைவர்களினால் செய்யப்பட்ட பெயர் நியமனத்திற்கு இணங்கச் செயற்படல் வேண்டும்.

(11) குறிப்பிட்ட துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினரல்லாத எவரேனும் பாராளுமன்ற உறுப்பினர் அக்கூட்டத்தில் நடைமுறைகளை அவதானிப்பதற்கு அக்குழுவின் தவிசாளரால் அனுமதிக்கப்படலாம்.

(12) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அதன் முதலாவது கூட்டத்திலும் அதன் பின்னர் தவிசாளர் பதவி வறிதாகிய பின்னர் கூடும் முதலாவது கூட்டத்திலும், துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(13) ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் அனுமதியைப் பெறாமல் அத்தகைய குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு வருகை தராதிருக்கும் குழுவின் உறுப்பினர் அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(14) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அது அவசியமெனக் கருதுமிடத்து, அவசியமானவையெனக் குழு கருதக்கூடியவாறான அத்தகைய

கருமங்களைப் பரிசோதனை செய்து அத்தகைய குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அதன் சொந்த உறுப்பினர்களிலிருந்து உபகுழுக்களை நியமிக்கலாம்.

(15) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயம் ஆற்றுப்படுத்துகைத் திகதியிலிருந்து ஆறு வாரங்கள் கழியும்வரை, பாராளுமன்றம் வேறுவகையாகப் பணித்திருந்தாலொழிய, பாராளுமன்றத்தினால் கவனத்திற்கெடுக்கப்படுதலாகாது. பாராளுமன்றமானது தீர்மானமொன்றின் மூலம் அத்தகைய காலப்பகுதியை தீர்மானிக்கப்படலாம்.

(16) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஏதேனும் சட்டமூலம் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க முக்கியத்துவம் வாய்ந்த கருமம் தொடர்பாக எவரேனும் பாதிக்கப்பட்ட அல்லது அக்கறைகொண்ட எவரேனுமாளிடமிருந்து சான்று கோரலாம்.

(17) ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், ஆட்களை அழைப்பதற்கும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவமளிக்கப்படுவதுடன் அவர்களின் முன்னர் எடுக்கப்பட்ட சான்றின் நிகழ்ச்சிக் குறிப்புகளுடன் சேர்த்து அவர்களின் அபிப்பிராயங்களையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(18) ஒரு துறைசார் மேற்பார்வைக் குழு சட்டத்தை இயற்ற அல்லது சட்டவாக்கம் சாராத அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட விடயம் குறித்துரைக்கப்பட்ட மற்றும் அமைச்சுப் பொறுப்பைக் கொண்ட அமைச்சரவையின் அமைச்சர் மற்றும் அவ்வாறு ஒதுக்கப்படாவிட்டால், பிரதமர் அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்ட பரிந்துரைகளை எட்டு வாரங்களுக்குள் நிறைவேற்றி, அந்த அவதானிப்புகள் தொடர்பாக அவர் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது குறிப்பிட்ட சிபாரிசு நிறைவேற்றப்படக்கூடாது என்று அமைச்சர் கருதினால், அதற்கான காரணங்களை அவர் எழுத்துமூலமாக விளக்கி அவர் முன்மொழிகின்ற மாற்று நடவடிக்கையை சுட்டிக்காட்டுதலும் வேண்டும். குழுவிற்குத் தேவைப்பட்டால் உரிய அமைச்சருக்கு விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன், அது தொடர்பில் எழும் கேள்விகளுக்கு, எட்டு வாரங்களுக்குள் பதிலளித்தலும் வேண்டும்.

(19) (அ) குழுவின் முன் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு விடயத்திலும் குழுவிற்கு உதவுவதற்கு 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஐந்திற்கு (5) மேற்படாத இளைஞர் பிரதிநிதிகளை தவிசாளர் அழைக்கலாம்.

(ஆ) தவிசாளரின் அனுமதியுடன், அவ்வாறு அழைக்கப்பட்ட இளைஞர் பிரதிநிதிகள், சாட்சிகளிடம் இருந்து கேள்விகளைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதோடு மற்றும் குழுவின் முன் ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்:

எவ்வாறாயினும், அந்த இளைஞர் பிரதிநிதிகள் குழுவில் வாக்களிக்க மாட்டார்கள்.

(இ) குழு தீர்மானிக்கின்றவாறான எந்தவொரு தீர்மானத்திற்கும் உட்பட்டு, அறிக்கைக்கான அநுபந்தம் ஒன்றாக குழுவின் அறிக்கையில் இளைஞர் பிரதிநிதிகளின் கருத்துகள், அவதானிப்புகள் மற்றும் அபிப்பிராயங்கள் உள்ளடக்கப்படுவதற்கு தவிசாளர் அனுமதியளிக்கலாம்.

(ஈ) இளைஞர் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான அளவுகோல்கள் தெரிவுக் குழுவினால் செய்யப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்."

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“நிலையியற் கட்டளை 111 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 112

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

“112. (1) ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்திலும் காலத்திற்கு காலம் தேவையானவாறு தெரிவுக்குழுவானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியவாறான அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கைக்கு சமமான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களை நியமிக்கலாம் :-

(அ) தவிசாளராக உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர்

(ஆ) இராஜாங்க அமைச்சர்,

(இ) பிரதி அமைச்சர், அத்துடன்

(ஈ) தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் வேறு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்.

(2) தனது கையொப்பத்தின் கீழான விண்ணப்பத்தின்மீது முன் அனுமதிபெறாமல் குழுவின் தொடரான மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருக்கும் எந்தவொரு உறுப்பினறும் அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீங்கியதாக கருதப்படுவதோடு தெரிவுக்குழுவினால் இணக்கம் காணப்பட்டாலன்றி அதே கூட்டத்தொடரில் அத்தகைய குழுவுக்கு மீளநியமிக்கப்படுதலுமாகாது:

ஆயின், முதலில் பாராளுமன்றத்தில் பெற்ற அனுமதியுடன் பாராளுமன்ற அமர்வுகளிலிருந்து சமுகமளிக்காதிருக்கும் அத்தகைய உறுப்பினர் அத்தகைய காலப்பிரிவில் வரும் ஒரு நாளில் இடம்பெறுகின்ற அத்தகைய குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் முன்னைய ஏற்பாடுகள் ஏற்புடையதாகாது.

(3) தான் உறுப்பினராகவில்லாத ஒரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டத்திற்கு எவரேனுமொரு பாராளுமன்ற உறுப்பினரும் தவிசாளரின் அனுமதியுடன் கலந்து கொள்ளலாம் என்பதோடு தவிசாளர் கோருகின்றபோது அதிலிருந்து நீங்கிக்கொள்ளுதலும் வேண்டும்.

(4) எவரேனும் பாராளுமன்ற உறுப்பினரால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்வதில் தவிசாளர் அல்லது பாராளுமன்றத்தினால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் தீர்மானங்கள், கட்டளைகள் மற்றும் ஆவணங்கள் உள்ளிட்ட எந்தவொரு விடயங்கள் தொடர்பிலும் பரிசீலனைசெய்து அது தொடர்பில் அறிக்கையிடுவது அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கடமையாகும்.

(5) (அ) குழுவின் கூட்டமானது குறித்த அமைச்சின் செயலாளருடனான கலந்தாலோசனையுடன் கூட்டப்படலாம்.

(ஆ) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவானது தவிசாளர் ஊடாக எந்தவொரு சட்டமூலம் அல்லது பிரேரணையை முன்னெடுப்பதற்கும் தத்துவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் தவிசாளரினால் அழைக்கப்படும் எச்சந்தர்ப்பத்திலும் கூடலாம். தவிசாளர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்து தவிசாளரினால் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையேனும் கூட்டமொன்றை ஏற்பாடுசெய்வதோடு அர்த்தமுள்ள நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பது தொடர்பில் வகைகூறுதல் அனைத்து அமைச்சு செயலாளர்களதும் கடமையாக இருப்பதோடு காலத்தற்கு காலம் அதன் சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களது எழுத்துமூல வேண்டுகோளின் பேரில் கூடிய விரைவில் ஒரு கூட்டம் கூட்டப்படலாம்.

(7) அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பெற்று பரிசீலனை செய்வதற்கும் இடத்திற்கு இடம்செல்வதற்கும் தமக்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்களை பூரணமாக பரிசீலனை செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருப்பினும் கூடுவதற்கும் ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசைனக் குழுவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) அமைச்சுசார் ஆலோசைனக் குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களை கொண்டதாக இருக்கவேண்டுமென்பதோடு உரிய கூட்டநடப்பெண் இல்லாதபோது அத்தகைய அமைச்சுசார் ஆலோசைனக் குழுவினை தொழிற்படுத்தாமலிருப்பது அதன் தவிசாளரது கடமையாதல் வேண்டும்.''

(9) குழுக்களிற்கான பொது விதிகள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களிற்கும் ஏற்புடையதாகும்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 112 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 119

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

''119. (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுகின்ற கணக்குகளையும் குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதித்தல் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, ஏதேனும் திணைக்களத்தின் அல்லது உள்ளூரதிகாரசபையின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் பற்றியும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயங்கள் தொடர்பான அவதானங்கள் பொதுநிதியின்

முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(4) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவையின் அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களிற்குப் பொறுப்பான அமைச்சரவையின் அமைச்சர் களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புக்களையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வார காலப்பகுதியினுள் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அந்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவோ அல்லது அந்த சிபாரிசுகளை பூரணப்படுத்தமுடியாது என்பது அமைச்சர் கருதினால் அதற்கான காரணங்களை அவர் எழுத்துமூலமாக விளக்கி அவர் முன்மொழிகின்ற மாற்று நடவடிக்கைமுறைகளை சுட்டிக்காட்டுதலும் வேண்டும். குழு தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு நேரடியாக விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதோடு அது தொடர்பில் எழும் கேள்விகளுக்கு, எட்டு வாரங்களுக்குள் பதிலளித்தலும் வேண்டும்.

(5) (அ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவானது, திணைக்களங்களினதும் உள்ளூரதிகாரசபைகளினதும் எல்லாக் கணக்குகளினதும் நிதிகளினதும் முகாமையினதும் மீது பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட ஏதாவது உபகுழுக்கள் தேவையானவாறு பாராளுமன்றத்திலோ அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதாவது தொடர்புடைய நிறுவனங்களிலோ அமர்வுகளை நடத்தலாம்.

(இ) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(7) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். குழு ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி குழுவின் தொடரான மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்காதிருக்கும் எந்தவொரு உறுப்பினறும் அவர் குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீங்கியவராக கருதப்படுவார்.''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 (4) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் பந்தியை பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம்

அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்டுதல் வேணடும் என்பதுடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அரசாங்க நிதியை முறையாக கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய காரணங்கள் எழுத்துமூலம் விளக்கமளிக்கப்பட வேண்டும். குழுவிற்கு தேவையாயின் விளக்கமளிப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். குழு அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 119 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 120

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"120. (1) தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் அல்லது வேறு பொறுப்புமுயற்சியின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் பரிசோதனை செய்யப்பட்ட கணக்குகள், வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், நிதிசார் நடவடிக்கைமுறைகள், செயல்நிறைவேற்றம் மற்றும் பொதுவான முகாமை என்பன பற்றியும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அறிக்கையிடுதல் வேண்டும். அவ் அறிக்கையானது நிவாரண நடவடிக்கை தேவைப்படுகின்ற விடயம் தொடர்பான அவதானங்கள் பொது நிதியின் முறையான உபயோகத்தை உறுதிப்படுத்துவதற்கான சிபாரிசுகள் ஆகியவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு

வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படலாம். எனினும், குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அரசாங்க நிதியை முறையாக கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய காரணங்கள் எழுத்துமூலம் விளக்கமளிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ் அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டுமென சிபாரிசுசெய்யடும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றும் முன்வைக்கப்படலாம். அவதானிப்புகள் அல்லது குறித்துரைக்கப்பட்ட நிறைவேற்றப்படமுடியாதுள்ள அவசியமெழாதென்பது அமைச்சரின் கருத்தாயின் அவரால் அதற்கான காரணங்கள் எழுத்துமூலம் முன்வைக்கப்பட வேண்டுமென்பதுடன் அவரால் பிரேரிக்கப்படும் நடவடிக்கைமுறைகள் குறிப்பிடப்பட வேண்டும். குழுவிற்கு தேவையாயின் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு விளக்கமளிப்பதற்கு குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும்.

(5) (அ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது, ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்திற்கு உடைமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் என்பவற்றின் எல்லாக் கணக்குகள்,

வரவுசெலவுத்திட்டங்கள் வருடாந்த மதிப்பீடுகள், நிதிகள், முகாமை என்பவை தொடர்பாகப் பரிசோதனை செய்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு அவசியமென அது கருதும்போது அதன் சொந்த உறுப்பினர்களை உள்ளடக்கிய எவையேனும் உபகுழுக்களை குழுவினால் பணிக்கப்பட்டவாறு நியமிக்கலாம்.

(ஆ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட எந்தவொரு உப குழுவிற்கும் தேவையானபோது பாராளுமன்றத்தில் அல்லது குழுவினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு சம்பந்தப்பட்ட நிறுவனத்திலும் கூட்டத்தை நடாத்துவதற்கு சந்தர்ப்பமளிக்க முடியும்.

(இ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு எவரேனும் உறுப்பினர்கள் குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(6) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்களில் எவையும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன்முன்னர் அழைத்து வினவுவதற்கும் பரிசீலனை செய்வதற்காக ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பவற்றைப் பார்வையிடவும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(7) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர் அவரின் உறுப்புரிமையை விட்டுச் சென்றவராக கருதப்படுவார்.''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 (4) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் பந்தியை பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும்

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்டுதல் வேணடும் என்பதுடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அரசாங்க நிதியை முறையாக கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகள் பற்றிய காரணங்கள் எழுத்துமூலம் விளக்கமளிக்கப்பட வேண்டும். குழுவிற்கு தேவையாயின் விளக்கமளிப்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். குழு அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 120 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 121

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"121. (1) தவிசாளர் எதிர்க்கட்சி உறுப்பினராகவிருத்தல் வேண்டுமென்ற வரையறைக்கு உட்பட்டு, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவையின் அமைச்சர் அல்லாத தவிசாளரொருவரையும் பதினொரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளதுமான அரசாங்க நிதி பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றைப் பரிசீலனை செய்வது அரசாங்க நிதி பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்:-

(அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின்கீழ் வருமானங்ளைச் சேகரித்தல்;

(ஆ) திரட்டுநிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்காக அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(ஈ) அரசாங்க நிதிகளைப் பயன்படுத்துதல்;

(உ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பொருளாதார மந்தநிலைகள், ஒதுக்கீட்டைக் கைமாற்றுதல் மற்றும் எதிர்பார்க்கப்படாத மீதி;

(ஊ) நடப்பாண்டுக்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்;

(எ) பொதுக் கடனும் கடன் சேவையும்; மற்றும்:

(ஏ) 2003 ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின்கீழான அறிக்கைகளும் கூற்றுக்களும்;

(ஐ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையின் கீழ் சட்டமூலங்கள், பிரேரணைகள், பிரேரணைகளுக்கான அங்கீகாரம் மற்றும் கட்டளைகள்

(3) பாராளுமன்றம் அல்லது ஏதேனும் குழு அல்லது அமைச்சரால் எந்நவொரு விடயத்தையும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு முன்வைக்கப்படலாம்.

(4) குழுவானது, மேற்குறித்த (2) மற்றும் (3) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களில் இருந்து எழுகின்ற பிரச்சினைகளை காலத்துக்காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை ஆரம்பிப்பதற்குமுன் குழுவினால்-

(i) மொத்த மதிப்பிடப்பட்ட செலவினத்தையும் அரசிறையையும் கணக்கிடுவதற்கான அடிப்படையாக பயன்படுத்தப்பட்ட அரசிறை நிதிசார் மற்றும் பொருளாதார ஊகங்களின் மீதான; மற்றும்

(ii) நிதி ஒதுக்கீடு அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இசைவாதல் பற்றிய;

அறிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

(6) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் அறிக்கையொன்று பாராளுமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படும்போது, அது நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் அதன் பின் அவ்வறிக்கை தொடர்பில் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் எட்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(7) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் ஆட்களை அழைப்பதற்கும் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் பிரேரணைகள் மற்றும் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை சாட்சிக் குறிப்புகளுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(8) கூட்ட நடப்பெண் நான்கு அங்கத்தவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"நிலையியற் கட்டளை 121 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிலையியற் கட்டளை 122

தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 122 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக இன்றைய தின ஒழுங்குப்பத்திரத்திலுள்ள பின்வரும் புதிய நிலையியற் கட்டளையைப் பதிலீடு செய்யுமாறு பாராளுமன்றச் சபை முதல்வர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"122. (1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பொது மனுக்கள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) முப்பதாம் நிலையியற் கட்டளையின் (10) ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்கீழ் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களைக் கவனத்திற்கொள்ளுதல் அதன் கடமையாதல் வேண்டும்.

(3) பகிரங்க அலுவரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதென பொது மனுக்கள் பற்றிய குழு கருதுமிடத்து, பொது மனுக்கள் பற்றிய குழு அத்தகைய மனுபற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தலாம்.

(4) பொது மனுக்கள் பற்றிய குழு, மனு ஒன்றை விசாரணை செய்த பின்னர் அல்லது பொது மனுக்கள் பற்றிய குழுவினால் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரிற்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தப்பட்ட மனுவொன்று தொடர்பில் அவரது நுண்ணாய்வு முடிவுற்றதன்மேல் அவரால் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைக் கவனத்திற் கொண்டதன்பின்னர், அத்தகைய மனு அல்லது அறிக்கைமீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைபற்றி அதன் அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம்.

(5) பொது மனுக்கள் பற்றிய குழு, அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்கள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றிய அதன் அபிப்பிராயத்தை, காலத்துக்குக்காலம் தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய மனுக்கள் மீதான அத்தகைய வேறு அவதானிப்புக்களுடன் சேர்த்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(6) அறிக்கையானது சபாபீடத்தில் இடப்படும்போது, சபாநாயகர் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கத்தினை எவரேனும் உரிய அமைச்சருக்கு அவரது அவதானிப்பு களுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வவதானிப்புகள் எட்டு வாரக் காலப்பகுதியினுள் அமைச்சரினால் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்.

(7) எவரேனும் உரிய அமைச்சரின் அவதானிப்புகளைப் பெற்றபின்னர் சபாநாயகர் அத்தகைய அவதானிப்புகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கும் மனுவைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாதவிடத்து தகுந்த தீர்வுகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட வேண்டும். அமைச்சரினால் ஒரு மாதகாலத்திற்குள் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அதனை நிறைவேற்றாமைக்கான காரணங்களை எழுத்துமூலம் முன்வைப்பதுடன் கருத்திற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.

(8) பொது மனுக்கள் பற்றிய குழு, அவசியமென அது கருதும்போது அக்குழுவின் உறுப்பினர்களிலிருந்து பொது மனுக்கள் பற்றிய குழுவினால் பணிக்கக்கூடியவாறான அத்தகைய மனுக்களை அல்லது அறிக்கைகளைப் பரிசோதனை செய்து அறிக்கையிடுவதற்காக பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களைக் கொண்ட உபகுழுக்களை நியமிக்கலாம்.

(9) பொது மனுக்கள் பற்றிய குழு அல்லது அதன் உபகுழுக்கள் எவையேனும் அவற்றின் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும், களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடுவதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(10) பொது மனுக்கள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும். பொது மனுக்குழுவின் அனுமதியின்றி தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறும் பாராளுமன்ற உறுப்பினர் அவரின் உறுப்புரிமையை விட்டுச் சென்றவராக கருதப்படுவார்" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது."

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“நிலையியற் கட்டளை 122 திருத்தப்பட்டவாறு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 8, 9, 19, 50, 52, 54, 55, 57, 58, 68, 70, 72, 111, 112, 119, 120, 121 மற்றும் 122 இற்கான திருத்தங்கள் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது.

“நிலையியற் கட்டளைகளுக்குத் தேவையான மொழியியல் பிழைகள், தட்டச்சுப் பிழைகள், இலக்கணப் பிழைகளையும் ,அதன் இடைநேர்விளைவான திருத்தங்களையும் செய்வதற்கு இச்சபை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரமளிக்கின்றது” எனும் பிரேரணையை பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒத்திவைப்பு :** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 3.51 மணிக்கு 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டது.